நூலகம்
இலக்கியம்

புத்தகச் செய்தி மாத இதழ்

நிறுவிய

ஆசிரியர்: நூலகநோனி - டாக்டர் பா. பெருமாள்
M.A., M.Lib.Sc., Ph.D.,



நூலக இயக்கத்தின் விடிவெள்ளி
தமிழக பொது நூலகத் துறை இயக்குநர்
திரு. இரா. கண்ணன்

நூலகம்: 1 மார்ச், 1996 இலக்கியம்:

புத்தக வெளியீட்டு விழாக்கள்



அறிவியலும் ஆன்மிகமும் 1995
பக்கம் . 240 ரூ . 30
டாக்டர் ஆ. ஞானம்
புதுவைப் பல்கலைக்கழக துணைவேந்தர்

அமைப்பு
மணிவாசகர் பதிப்பகம்
8/7, சிங்கர் தெரு பாரிமுனை
சென்னை-600 108.
தொலை பேசி : 561039

இலக்கிய வீதி
6 - 4 - 1996 சனிக்கிழமை மாலை 5-45
பாரதிய வித்யாபவன் மைலாப்பூர்,
சென்னை-4.



மாதவி காவியம் 1995
பக்கம் . 265 ரூ . 90
கவிஞர் தமிழ்ஒளி
திரு. செ. து. சஞ்சீவி
புகழ் புத்தகாலயம் 48, பிள்ளையார் கோயில் தெரு
சென்னை-30.

விழா : 29 - 3 - 1996 வெள்ளி மலை 6 மணி
சீனிவாச காந்தி நிலையம் 248, மவுபரீஸ் சாலை
ஆழ்வார்பேட்டை, சென்னை-78.

நூலக இயக்கத்தின் விடிவெள்ளி

பொது நூலகத்துறை இயக்குநர், திரு. இரா. கண்ணன்

1995 ஓராண்டுச் சாதனைகள்



- ☐ விடிவெள்ளி முளைத்து விட்டது. கண்டுகொண்டோம்.
- ☐ தமிழ்ப் புத்தகத்துறைக்கு விடிவு காலமும் பிறந்து விட்டது.
- ☐ தேர்வு செய்து, நூல் வாங்க அனுமதிப்போம்.
- ☐ விரைவாக வாசகர் படிக்க அனுப்பிவைப்போம்.
- ☐ நூலக இயக்க வளர்ச்சியே எப்போதும் சிந்தனை.
- ☐ செயல்படுத்தி வெற்றிகாண உதவுவோம்.
- ☐ எழுத்தாளர்களுக்கு லட்சம் பரிசு—லட்சியமானது.
- ☐ நூலகர் பதவிகளுக்கு அரசுக்கு சிபாரிசு.

- ☐ அகில இந்திய தேர்வு மையங்கள் அமைப்பு.
- ☐ தமிழ் நூல் தொகை— மாதா மாதம், ஆண்டுத் தொகுப்பும் வெளியிட **''நூலக இலக்கியம்''** முன் வந்துள்ளது.
- ☐ தேசிய நூலகம் கன்னிமாரா, நூற்றாண்டு காணும் நேரத்தில் அறிஞர் குழு அரசு நியமனம்.
- ☐ கம்ப்யூட்டர் பணி அறிமுகம்.
- ☐ நூலகக் கல்விப் பயிற்சி தரமிக்கதாக அமைய யோசனைகள்.

நீங்கள், செய்ய வேண்டியது என்ன?

1) நீங்கள் ஒரு மாதத்தில் பல செய்திகளை வாசிப்பீர்கள். எந்த செய்தி மக்களுக்கு நீண்ட காலத்திற்கு உபயோகமாக இருக்கும் என்று நினைக்கிறீர்களோ அச்செய்தியை பத்துவரிகளுக்குள் எழுதி எங்களுக்கு அனுப்புங்கள்.

2) நீங்கள் பலரை சந்திக்கிறீர்கள். பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். உங்கள் மனதைத் தொட்ட ஒரு நல்ல நிகழ்ச்சியை எங்களுக்கு எழுதுங்கள்.

3) நீங்கள் வானொலி கேட்கலாம் தொலைக்காட்சி பார்க்கலாம். அதில் நீங்கள் சுவைத்ததை எழுதுங்கள்.

4) உங்களுக்குத் தெரிந்து யாராவது ஒருவர் எதிலாவது சிறந்தவராக இருந்தால் அவரைப்பற்றியும் எழுதலாம்.

5) நீங்கள் நூலகம் செல்பவர்தானே! உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை நூலகத்திற்கு எழுதலாமே!

தங்களின் (பாஸ்போர்ட் சைஸ் கருப்பு வெள்ளை புகைப் படத்துடன் தாங்கள் முழு முகவரியுடன் (தொலைபேசி எண்ணுடன்) எழுதி அனுப்புங்கள்.

நூலக ஞானி
டாக்டர் **பா. பெருமான்**
M.A., M.Lib. Sc Ph.D.,
நிறுவிய ஆசிரியர்

நூலகம் இலக்கியம்
6, மு. வ. தெரு,
அரும்பாக்கம்,
சென்னை-600106.
தொலை பேசி : 4845034

தமிழ்நாட்டில் பொது நூலகப் பணியின் வளர்ச்சி

தோற்றம்

1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள் நமது நாடு சுதந்திரம் அடைந்தது. நாம் பெற்ற நாட்டுரிமையோடு நமக்கு உரிமைகளும், கடமைகளும் வந்தன. அந்த உரிமையின் அடிப்படையில் மக்களுக்காக மக்களால் நடத்தும் அரசு உருவாகியது.

நாட்டுமக்கள் அனைவரும் கல்வி அறிவு பெறவேண்டும் என்ற கருத்தோடு மத்திய அரசும், மாநில அரசும் பல முயற்சிகள் எடுத்தன. அந்த முயறசியின் பலனாக வயது தந்த குழந்தைகள் அனைவரும் கட்டாயக் கல்வி பெறும் திட்டம், பள்ளியில் படிக்க முடியாதவர்களுக்காக முதியோர் கல்வி, சமூகக்கல்வி, தொழிலாளர்கல்வி, விவசாயக்கல்வி, முறைசாராக்கல்வி என்ற பல திட்டங்களை மக்களுக்கு நமது அரசு அளித்து வருகிறது.

நாட்டுமக்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படும் நிலையிலும், தொழிலாளர்கள், விவசாயிகள், மகளிர் மற்றும் குழந்தைகள் கல்வி வளர்ச்சிக்காகவும், மக்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்கல்வி பெறவும் மாநிலம் முழுவதும் நூலகப் பணிகள் சிறப்பாக நடக்க தமிழ்நாடு அரசு 1948-ஆம் ஆண்டில் தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் இயற்றியது. பல கல்வி நிறுவனங்களுக்குத் தொடர்பாளராயிருந்த 'திரு. அவினாசிலிங்கனார்' அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த பொழுது இச்சட்டம் வந்தது.

நூலகச்சட்டம்

1948-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1950-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தமிழ்

நாட்டில் நடைமுறைக்கு வந்தது. சுதந்திர இந்தியாவிலேயே இந்தச் சட்டம் ஒரு முன்னோடி சட்டமாக செயல்படத் துவங்கியது. கல்வித்துறையை நிர்வாகித்து வந்த பொதுக் கல்வி இயக்குநர் நூலகத் துறைக்கும் இயக்குநராகப் பொறுப்பேற்று நூலகப் பணியைச் சிறப்பாகச் செயல்படுத்தி வந்தார்.

அரசின் நேரடிப்பார்வையில் இருந்த சென்னை 'கன்னிமாரா பொது நூலகம்' மாநில மைய நூலகமாக திதழ்ந்தது. ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நூலக ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நூலகம் ஏற்படுத்தப்பட்டு, இதனைத் தொடர்ந்து பேரூர்களிலும், சிற்றூர்களிலும், கிராமங்களிலும் பெரும் அளவில் கிளை நூலகங்கள் நிறுவப்பட்டன.

தமிழ்நாட்டோடு இணைந்த கன்னியாகுமரி மாவட்டத்திற்குத் தமிழ்நாடு நூலகச் சட்டத்தை நீடித்து நாகர்கோவில கவிமணி நூலகம் 17.8.1977 முதல் அரசினரால் ஏற்றுக்கொளளப்பட்டது.

தற்போது பணிபுரிந்தும் பணி முனைகள் விவரம்:

மாநில மைய நூலகம்	:	1
மாவட்ட மைய நூலகங்கள்	:	21
கிளை நூலகங்கள்	:	1532
பகுதிநேர நூலகங்கள்	:	1125
இயங்கும் நூலகங்கள்	:	9

நிதி நிலைமை

நூலகப் பணியை வளர்க்கும் பொருட்டு தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948-ன்படி ரூபாய்க்கு மூன்று பைசா வீதம் நூலகவரி வசூலிக்க வழி செய்தது. இந்த நூலக வரியை உள்ளாட்சி நிறுவனங்கள், மாநகராட்சிகள், வசூலிக்கும் சொத்துவரி அல்லது வீட்டு வரியின் மேல், 'மேல்வரியாக'

(Surcharge) வசூலித்து மாவட்ட நூலக ஆணைக்குழுக்களுக்குச் செலுத்தி வருகின்றன.

இணைமானியம்

மக்கள் தரும் நூலக வரிக்குச் சமமாக சட்ட பூர்வமாக இணைமானியத்தை அரசு அளித்து வந்தது. நூலகப் பணியை கிராமப்புற மக்களுக்கும் மாநில ஐந்தாண்டு திட்டங்களின் மூலம் நூலகப் பணியைக் கிராமப்புறங்களில் விரிவுபடுத்த அரசு நிர்வகிப்பு மானியம் அளித்து வருகிறது.

மேற்காணும் நிதி வரவினங்களைக் கொண்டு வளர்ந்து வரும் நூலகப்பணி வளர்ச்சிகளைச் செவ்வனே செய்துவர இயலவில்லை. இதன்படி ரூபாய்க்கு மூன்று பைசாவாக வசூலித்து வந்த நூலகவரியை 1972-ஏப்ரல் முதல் ரூபாய்க்கு ஐந்து பைசா வீதம் அரசு வளர்ச்சிகளும், தகவல் முன்னேற்றங்களும் கணிப்பொறி வளர்ச்சிகளும் இந்த கூடுதல் நூலக வரிவசூல் மூலம் போதாமையால் அரசு 1.4.'92 முதல் மேலும் நூலகவரியை ரூபாய்க்கு பத்து பைசாவாக உயர்த்தியது. இவை நூலகப்பணி முன்னேற்ற வளர்ச்சிகளுக்கு ஓர் உறுதுணையாக இருக்கிறது.

தனி நூலகத்துறை

நூலகப் பணி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளரத் தொடங்கியது. பொதுக் கல்வித்துறையை கவனித்து வந்த இயக்குநர் நூலக வளர்ச்சிக்கு வித்திட்டவர் ஆவார். அவரது தலைமையின்கீழ் பணிபுரிந்து வந்த மாவட்ட கல்வி அலுவலர்கள் நூலகப் பணி பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு செயல்பட்டனர்.

மக்கள் தொகை வளர வளர, கல்வி வளர்ச்சி பெருக பெருக, படிக்கும் பழக்கமும் முன்னேறியது. புதிய தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமும், விழிப்புணர்வும் மக்களிடத்தில் ஏற்பட்டதால் நூலகப் பணியும் முன்னேற வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டது. இவ்விதமான பணிகளை

கவனிக்க ஒரு தனித்துறையை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியது. இந்த தனித்துறை 1972-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1-ஆம் தேதி முதல் செயல்படத் துவங்கியது.

இதனைத் தொடர்ந்து மாவட்ட அளவில் நூலகப் பணியை கவனிக்க 1977 ஜனவரி 3-ஆம் நாள் முதல் மாவட்ட நூலக அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

நூலகப்பணி மேலும் வளர நூலகப் பணியாளர்களை உற்சாகப் படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் தமிழக அரசு 1.4.1982 முதல் நூலகப் பணியாளர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக அறிவித்தார்கள். இதன் பயனாக 3,200 பணியாளர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர்.

நலிந்த நூலக ஆணைக்குழுக்களுக்கு சிறப்பு மான்யம்

தற்பொழுது நூலக நிதியிலிருந்து நூல்கள் வாங்கப்பட்டு வருகின்றன. அரசு 1984-85 முதல் ரூ 11.00 இலட்சம் நலிந்த நூலக ஆணைக்குழுக்கு அனைத்திற்கும் சேர்த்து அளித்து வருகிறது. இதில் சென்னை மாவட்டம் மட்டும் சேரவில்லை.

கட்டடங்கள்

இன்று பல மாவட்ட மைய நூலகங்கள் சொந்தக் கட்டிடத்தில் இயங்கிவருகின்றன. மற்றும் எல்லா கிளை நூலகங்களும் சொந்தக் கட்டிடத்தில் இயங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் கட்டிடம் கட்ட இலவச நிலம் கிடைத்த எல்லா இடங்களிலும் கட்டிடம் கட்டப்பட்டு வருகின்றன. 2000 ஆம் ஆண்டு முடிகின்ற பொழுது அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நூலகங்கள் சொந்தக் கட்டிடத்தில் இயங்க முடிவு செய்யப்பட்டு மிக துரிதமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நூலகவியல் பயிற்சி நிலையம்

நூலக ஆணைக்குழுக்களில் பணிபுரியும் பயிற்சி பெறா மூன்றாம் நிலை நூலகர்களுக்கு நூலகவியல் (சான்றிதழ்)

பயிற்சி தரும் பொருட்டு வகுப்புகள் சென்னையில் பொது நூலக இயக்கத்தில் நடைபெற்று வருகின்றது. இதுவரை 45 பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளது. தற்பொழுது இப்பயிற்சி வகுப்புகள் துணைப் பொது நூலக இயக்குநர், இரண்டு உதவி விரிவுரையாளர்களைக் கொண்டு பணி சிறப்பாக வருகின்றது. இராஜாராம் மோகன்ராய் அறக்கட்டளை நிதியுதவியின் மூலம் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் மாவட்டந் தோறும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தனியார் நூலகங்களுக்கு அரசுமானியம்

தமிழ்நாட்டில் உள்ள தனியார் நூலகங்களுக்கும் அரசு மானியம் வழங்கி வருகின்றது. இம்முறையில் 'தஞ்சாவூர் சரபோஜி மகாராஜா சரஸ்வதி மகால் நூலகம்', சென்னை மறைமலையடிகள் நூலகம், டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் நூலகம், மற்றும் தனியார் நூலகங்களும் அரசு மானியமாக வழங்கி வருகின்றது.

ஊர்புற நூலகங்கள்

தமிழக அரசு தீட்டிவரும் பல நல்ல முன்னேற்ற திட்டங்களில், பொது மக்களின் படிக்கும் ஆர்வத்தை அதிகமாக்கவும், நிறைவு செய்யவும் வேண்டும் என்ற குறிக்கோளோடு 625 ஊர்ப்புற நூலகங்களை திறப்பதற்கான அரசு ஆணை அன்மையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் அன்பான வேண்டுகோளின் அடிப்படையிலும், பலதரப்பட்ட எல்லா மக்களுக்கும் பயன் அளிக்கும் முறையிலும் ஊர்ப்புற நூலகங்கள் செயல்பட உள்ளது. இந்த நூலகங்களுக்கு பொது மக்களின் ஈடுபாடும், ஆர்வமும் இருக்கவேண்டும் என்ற குறிக்கோளின்படி ஊர்ப்புற கிளை நூலகங்கள் உடனடியாக செயல்பட, வாடகை இல்லாத கட்டிடம் ஒன்றும், 5 சென்ட் காலிமனையும் இலவசமாக அளிக்கவும், குறைந்தது 200 நூலக உறுப்பினர்களை சேர்க்கவும், கிளைநூலகம் நன்கு செயல்பட தேவையான மேஜை. நாற்காலி போன்ற தளவாடப் பொருள்கள் அன்பளிப்பாக பெறவேண்டும் என்கிற நிபந்தனைகள்

உள்ளன. பொது நூலகத்துறை 2000 நூல்களையும், பொது மக்களின் விருப்பத்திற்கேற்ப நாளிதழ்களையும் வாங்கி வைத்து சிறப்பாக இந்நூலகங்கள் செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் ஊர்ப்புற மக்களும் சிறந்த கல்வி அறிவையும், பொது அறிவுகளையும் பெற்றிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கந்தோடு 'எல்லோரும் அறிவை பெற்றிட வேண்டும்' என்ற நோக்கத்தோடு இப்பணி மிக விரைவில் அனைத்து ஊர்ப்புறங்களிலும் தொடங்கப்பட உள்ளன.

மகளிர்க்கென தனிநூலகம்

மகளிர்க்கென தனி நூலகம் தொடங்கப்பட்டு அனைத்து மகளிரும் தங்களுக்கெனவே தொடங்கப்பட இருக்கும் நூலகத்தை அதிக நேரம் பயன்படுத்திட வேண்டும் என்ற குறிக்கோளுடன் தொடங்கப்பட உள்ளது.

பேரறிஞர் அண்ணா நூலாசிரியர் விருது.

தமிழக அரசின் ஆணையின்படி பொது நூலகத்திற்கு அனுப்பும் அனைத்து நூல்களில் சிந்த மூன்று நூல்களின் ஆசிரியருக்கு ''பேரறிஞர் அண்ணா நூலாசிரியர்'' விருதுகள் வழங்கப்பட உள்ளன. இதில் முதல் பரிசாக ரூ. 50,000, இரண்டாவது பரிசாஜ ரூ. 30,000, மூன்றாவது பரிசாக ரூ. 20,000 அளிக்கப்பட உள்ளது. இப்பரிசுகள் மூலமும் பேரறிஞர் அண்ணா விருது அளிக்கப்படுவதன் மூலம் சிறந்த எழுத்தாளர்களை பக்கப்படுத்தவும், மேலும் பல சிறந்த எழுத்தாளர்கள் உருவாக வேண்டும் என்ற நோக்கத்தோடும் தமிழக அரசு நல்ல பயனுள்ள திட்டத்தை அறிவித்துள்ளது.

போட்டிமுனைத் தேர்வு

மருத்துவம், பொறியியல், விவசாயம் போன்ற முக்கிய மான போட்டி முனைத் தேர்வுக்கு செல்லும் மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி வகுப்புகளை நடத்த பெற்றோர்—ஆசிரியர் சங்கங்களின் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் நடத்த

திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாதிரியான சிறந்த திட்டங்களை பொது நூலகத்துறையின் மூலம் திறமையாக, சிறப்பாக நடத்த வேண்டும் என்பது நூலகத் துறையின் முக்கிய நோக்க மாகவும், குறிக்கோளாகவும் கொண்டு தனது பணிகளை இன்றைய நாட்டின் முன்னேற்ற வளர்ச்சிக்கேற்ப துரித நடவடிக்கைகளின் மூலம் செயலாக்கிக்கொண்டு வருகின்றது.

'நூலகத்துறையின் பலவிதமான பணிகள்'

இயங்கும் நூலகப்பணி

கிளை நூலகங்கள் திறப்பதற்கு வாய்ப்பில்லாத இடங் களுக்கெல்லாம் சேவை செய்யும் பொருட்டு இயங்கும் ஊர்தி மூலம் நகர்ப் புறங்களிலும், கிராமப் புறங்களிலும் சென்று நூல்களை இரவலாக கொடுத்தும், படிக்கும் எண்ணத்தையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தி வருகிறோம். இத்திட்டம் மிகமிகப் பயன் அளிப்பதாக உள்ளது. இதனால் வாசகர்கள் மிகுந்த அளவில் ஆர்வத்தோடு பயன் படுத்தி வருகின்றனர்.

உறுப்பினர் வீடுகளுக்கு நூல் வழங்கும் திட்டம்

நூலக உறுப்பினர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் அல்லது மிதி வண்டிகள் மூலமாக அவர்கள் இல்லத்திற்குச் சென்று நூல்களை வழங்கும் திட்டம் சிறப்பாக நடந்து வருகிறது. இத்திட்டம் சென்னை மற்றும் பல மாவட்டங்களில் சிறப்பாக நடைபெற்றறு வருகிறது.

மருத்துவமனையில் நூல் வழங்கும் திட்டம்

மருத்துவமனையிலிருக்கும் நோயாளிகள் தங்களது நோயின் கொடுமையை மறந்திருக்கவும், தங்களின் சிந்தனை களை நூல்களிலே செலுத்திப் பயன் பெறவும் அவர்களின் படுக்கைக்கே சென்று நூல் வழங்கிடும் திட்டம் 14.3.1960-இல் சென்னை பொது மருத்துவமனையில் தொடங்கி வைக்கப் பட்டது. இத் திட்டம் சென்னையில் மட்டும் இல்லாமல் தற்பொழுது அனைத்து மாவட்டங்களின் மருத்துவமனைகளில்

கிளை நூலகங்கள் தொடங்கப்பட்டு பணிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சிறைச்சாலையில் நூல் வழங்கும் திட்டம்

சிறைச்சாலையில் கைதிகள் சிந்திக்கவும், தெளிவு பெறவும், சீர்திருந்தவும், கவலையை மறக்கவும் சிறந்த அறிவு நூல்களை அவர்களுக்கு சிறைச்சாலையில் பணிபுரியும் காவலர்கள் மூலம் கொடுத்தும், இயங்கும் நூலகப் பிரிவு, மூலம் அவ்வப்போது நூல்கள் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் சென்னை, சேலம். திருநெல்வேலி, கடலூர், போன்ற இடங்களில் நன்கு நடைபெற்று வருகிறது.

காவலர் குடியிருப்பு இடங்களில் நூலகம்

காவலர்கலர்கள் தங்களுக்குக் கிடைக்கும் நேரத்தை அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் குடியிருக்கும் இல்லத்துக்கு அருகிலேயே நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முதலில் சென்னையில் தொடங்கப்பட்டு பல மாவட்டங்களில் பலரும் பயன் பெறும் வண்ணம் பணிகள் நடை பெற்று வருகின்றன.

பார்வையற்றோர் பயன் பெற நூலகம்

பார்வையற்றோர் பயன் பெற அவர்களுக்கென தனிபிரிவு ஒன்று சென்னை மாவட்ட மத்திய நூலறத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஒலி நாடாக்களின் மூலம் அறிவியல் கருத்துக்களையும் தகவல்களையும் கேட்டு அறிந்துக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

குறிப்புதவி நூல் பிரிவு

மத்திய நூலகத்தின் தனிச் சிறப்பாக குறிப்பு நூல் பிரிவுப் பகுதி செயல்பட்டு வருகிறது. இங்கு மிக விலை உயர்ந்த நூல்களும், கிடைப்பதற்கு அரிதான நூல்களும் வைக்கப்பட்டுள்ளன. எல்லாப் பிரிவினரும் அதாவது மருத்துவத்துறையினர், பொறியியல் துறையினர், விவசாயத் துறையினர்

போன்ற அனைத்துத் துறையினரும் இந்தப் பிரிவில் அமர்ந்து தங்களுக்குத் தேவையான அறிவுக் கருத்துக்களைப் பெறலாம். ஆராய்ச்சிக்கான நூல்களைப் பெற்று குறிப்புகள் எடுக்க மிகச் சிறந்த அமைதியான இடமாக இந்த இடம் விளங்கி வருகின்றது.

மாணவர் பகுதி

மத்திய நூலகத்தில் மாணவ, மாணவியர்களுக்காக இப் பகுதி அமைக்கப்பட்டு, மேல்நிலைப் பள்ளி, கல்லூரி பட்டப் படிப்பு, முதுநிலைப் பட்டப் படிப்பு ஆகிய மாணவர்கள் அனைவரும் படிப்பதற்கும், குறிப்புகள் எடுப்பதற்கும் பாட நூல்கள் வைக்கப்பட்டு, சிறப்பாகப் பயன்பட்டுச் செயலாற்றி வருகிறது.

நிறுவன உறுப்பினர் திட்டம்

ஒவ்வொரு மாவட்ட மத்திய நூலகத்தில் நிறுவன உறுப் பினர்களாக ரூபாய் நூறு மட்டும் செலுத்தி, நூறு அல்லது ஐம்பது நூல்களை பெற்றுச் செல்ல திட்டம் செயல்பட்டு வருகின்றது. இதில் அனைத்து பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் நிறுவன உறுப்பினர்களாகி நூல்களை எடுத்து பயன் பெற்று வருகின்றனர்.

குடிமைப் பணித் தேர்வு கல்வி மையங்கள்

குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டிலும் பல மாண வர்கள் வெற்றி பெற வேண்டும் என்ற அரசின் குறிக்கோளின் படியும், அரசுத் தேர்வானையம் மூலமும் பலர் தேர்வு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் அதற்கென தேவையுள்ள அனைத்து நூல்களையும், பருவ இதழ்களையும் வாங்கி அவை களைப் பொருள் வாரியாக அடுக்கிவைத்து தேவையான நூல் களை விரைவில் கண்டுபிடித்து எடுப்பதற்கு ஏற்ப வசதிகள் செய்யப்பட்டுள்ளன. திங்கள் தோறும் குறிப்பிட்ட துறையில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு சொற்பொழிவுகளும், கருத்துப் பரிமாற்றங்களும் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக அனைவரும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி

நூலகத்தின் இப்பகுதியை பயன்படுத்தி அறிவுச் செல்வங்களைப் பெறலாம். இப்பகுதி சிறப்பாக நடைபெற்று வருகிறது. மாணவர்கள் இப்பகுதியை பயன்படுத்துவது விரிவாகிக் கொண்டே இருக்கின்றது.

இப்பிரிவுகளில் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி: 4, நான்கு தேர்வுகள் முதல் மத்திய பணியாளர் தேர்வாணையம் நடத்தும் அனைத்துத் தேர்வுகள் வரை நூல்களைப் பயன்படுத்தி பயன் பெறலாம். இவைகள் பலமாவட்டங்களிலும் (18) அமைந்துள்ளன.


மாலிப்நெட்

மாலிப்நெட் தகவல் பிணைப்பின் தகவல் மைய மாகச் செயல்படுபவையாகும். இதன் மூலம் ஒவ்வொரு நூலகங்களின் பருவ இதழ்களைக் குறித்தும், பருவ இதழ்களில் வந்துள்ள கட்டுரைகளைக் குறித்தும் தகவல் பெற முடியும், சென்னை மாவட்ட மைய நூலகம் இம் மையத்தில் உறுப்பினராக இருப்பதால் வாசகர் விருப்பும் தகவல்களை இம் மையத்தில் தொடர்பு கொண்டு உடனடியாக தகவலை கணிப்பொறி மூலம் பெற்று மிக உன்னதமான தகவல் பணியைச் செய்து வருகின்றது.

முடிவுரை

தமிழ்நாட்டு மக்களுக்கு நூலகப் பயன் கிடைக்கும் வகையில் பொது நூலகத்துறை திட்டமிட்டு செயலாற்றி வருகிறது. வாசகர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகமாக பெருகி வரவேண்டும் என்ற நோக்கில் சிறந்த பயனுள்ள நூல்கள் வாங்கப்பட்டு வருகின்றன. சிறுவர்களுக்கான நல்ல நூல்களுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டு வருகின்றன. தொலைக்காட்சியின் மூலம் நூலகத்தின் வளர்ச்சிகள் குறித்தும், பணி முன்னேற்றங்கள் குறித்தும் நூலகத்தை தவறாது பயன்படுத்தி வந்தால் வாழ்வில் முன்னேற்றம் காணலாம் என்பதை படக்காட்சியின் மூலமும் காட்டப்பட்டு வருகின்றன. இவ்விதமாக நூலகப்பணி சிறக்க தமிழ்நாடு அரசு என்றும் ஆதரவு அளித்து வருகின்றது என்பது மகிழ்வுக்குரிய செய்தியாகும்.

நூலகத் தந்தை





கல்மேல் எழுத்து: எழுதுபவர் இந்திரா பெருமாள்

நூலகம் இலக்கியம் வளர்ச்சிக்கு வாழ்த்தி உதவிய புரவலர்கள், போஷகர்கள் முதல் விவரப்பட்டியல் நூலகம் 1 இலக்கியம் 3—பக்கம் 15இல் வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, நூலகம் இலக்கியம் வளர்ச்சிக்கு உதவி வரும் **வேர்களும் விழுதுகளும்**

15. திரு. பி. டி. சண்முகம் அவர்கள்
21. குட்டையச் செட்டித்தெரு
புரங்கிப்பேட்டை— ரூ. 1000.

16. திரு. ''ராஜ்''—ராஜகோபால், பி. ஏ., எஃசி. ஏ.,
42, காமகோடி, நகர், 4வது குறுக்குத்தெரு
வளரசவாக்கம், சென்னை—600 087. ரூ. 1000.

17. திரு. ஏ. ஜி. எஸ். மணி
6, போயஸ் ரோடு, M. M. கார்டன்
சென்னை—600 018. ரூ. 1000.

18. திரு. ராதா கிருஷ்ணன்
பைனான்சியர்,
சென்னை—600 106. ரூ. 1000,

19. திரு. முத்து, எம் ஏ.,
126, ''ஓ'' பிளாக், அண்ணாநகர் ரூ. 1000.
சென்னை—600 102.

20. டாக்டர் ஈ. ஹரிஹரன்
ஆசிரியர், கோகுலம்
சிறுவர் இலக்கிய மேதை
சென்னை-600 010. ரூ. 1000.

21. பேராசிரியர் தங்கசிகாமணி
57, சானகிராம் காலனி
அருப்பாக்கம்
சென்னை—600 106. ரூ. 1000.

22. Er. கார்த்திக், B.E.,
57, சானகிராம் காலனி
சென்னை-600 106. ரூ. 1000

ஆண்டுச்சந்தா ரூ. 120 அளித்து, உதவிவரும் நல் இதயங்களுக்கு மிக்க நன்றி. பட்டியல் தயாராகிறது. விரைவில் வெளியிடப்படும். இது **நூலக இலக்கியத்தின்** 7வது இதழ் மார்ச் 1996 கடைசியில் காலதாமதமாக வெளியாகிறது. மன்னித் தருளுங்கள்.

—ஆசிரியர்.

தமிழ்ப்புத்தங்கள் 1995




புதிய நிருபர்
பப்ளிகேஷன்ஸ்
2, முத்துக்கிருஷ்ணன் தெரு,
தபெ.எண்-1040, பாண்டிபஜார்.
தியாகராயநகர், சென்னை-600017.





அடுத்த இதழில்
புத்தக விவரப்பட்டியல்
வெளியாகும்

நூலக பஞ்ச சீலம்



படிப்பதற்கே புத்தகங்கள்.

வாசகருக்கேற்ற புத்தகங்கள்.

படிக்காத புத்தகங்கள் கூடாது.

கால விரயம் கூடாது.

நூலகம் வளரும் ஸ்தாபனம்.

நூலக இலக்கிய
மாணவமாணவியரே

நூலக இலக்கியம்
தொடர்ந்து படியுங்கள்


நீங்களும் எழுதலாமே

சந்தா ரூ. 120.
புரவலர் ரூ. 1000,
கொடுத்து உதவலாமே,

சிறுவர் எழுத்தாளர் அறிமுகம்

ஏ. ஜி. சுப்பிரமணியன்

A. G. SUBRAMANIAN





பெயர்: ஏ. ஜி. சுப்பிரமணியன்

வயது: 61 (28-1-1935)

படிப்பு: பட்டப்படிப்பு

முகவரி: 6, போயஸ் ரோடு, M.M. கார்டன் சென்னை-18.

தொழில்: ஆசிரியர், தலைமை ஆசிரியர், பள்ளி நிர்வாகி—நூல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி வெளியிடுதல்.

பள்ளி: மன்னார் நாயுடு திண்ணைப்பள்ளி காவேரிப்பாக்கம்.

அரசு உயர் நிலைப்பள்ளி—காவேரி பாக்கம் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி-திருவூர்

B.A. Madras University. B.Com., Delhi University.

இலக்கியப் பணி : 1950ல் பிரசண்ட விகடனில் கட்டுரை வெளிவந்தது.

1951ல் இறுதிக்குரல் முதல் நூல் கலைஞர் முன்னுரை 1952ல் 'கண்ணாடி'— மு.வ, முன்னுரை 1953ல் இன்ப மாளிகை— Dr, K. V. S. மணியன் பாராட்டுரை 1954—64 'கல்வி', 'குழந்தைகள் உலகம், பத்திரிகை நடத்தினார், ஆரம்பக்கல்வி'' பல கட்டுரைகள்,

1964 — 94 நர்சரி, ஆரம்பக் கல்வி முதியோர் கல்விக்கான கதைகள், கட்டுரைகள் நூற்றுக்கும் மேலாக வெளி வந்துள்ளன.

Oxford, Orient Longmans, Blackie N.C.B.H. Allied, Dr. G. Muthu போன்ற நூல் வெளியீட்டாளர்கள் இவரின் நூல் களை வெளியிட்டுள்ளனர்.

எழுத்துப்பணி: குழந்தைகளுக்காக தமிழிலும் ஆங்கிலத் திலும் நூல்களை எழுதியும் வெளி யிட்டும் வருதல்.

சிறப்புப்பணி: ரூபாய் 1 லட்சத்திற்கு மேல் செலவு செய்து குழந்தைக்கான நூல்கள், ஒலி ஒளி, நாடாக்கள் கொண்ட நூலகம் அமைத்திருக்கிறார்.

ஆரிசியர் பணி: தாம்பரம் வள்ளுவர் குருகுலம், சென்னை T. T. V, உயர் நிலைப்பள்ளி, பாக் சந்து துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர், இராமகிருஷ்ண பள்ளி

தலைமை ஆசிரியர் பணியினை முடித்து 1994ல் ஓய்வு பெற்றார்.

எழுதுவதற்கு வித்திட்டவர்கள் : அணில் — அழவள்ளியப்பா கல்கண்டு — தமிழ்வாணன் ராஜாஜி, மா. பொ. சி. டாக்டர் மு.வ. அண்ணா, கி. வா. ஜா. முதலானோர்.

எழுத்து புத்தமாக வெளிவர உதவும்: M. பாலகிருஷ்ணன், N, கேசவன் தாமரைக் கண்ணன், புலவர், திரு. ராசகோபால் மகாலிங்கம் இராமண்ணா,

பரிசு: சமூக நலத்துறை பாராட்டு,

மகிழ்ந்த நிகழ்ச்சிகள் : கழகம், பாரிநிலையம், திருமகள் நிலையம் போன்றவை தமிழ் நூல்களை வெளியிடு கின்றன.

தகவல் வெளியீட்டில் எழுத்தாளர் யார்? எவர்?

Bibliography- N. B. T. Indo American Who's who?

பிரபல மாணவர்கள் —மணிமேகலை வெளியீடு

எழுத்தாளர்களே இணைந்து செயலாற்ற வருக

புத்தக உலகம் 6, பிரான்சிஸ் ஜோசப் தெரு, (Y.M C.A) சென்னை—1.

Phone: 451067,

வாழ்க்கையின் குறிக்கோள்:

எழுத்தாளர் — பதிப்பாளர் விற்பனை யாளர் இணைந்து வாசகர்கள் விரும்பும் பயனுள்ள நல்ல விஷயங்களை கொடுத் தல்.

குழந்தைகள் உலகம்

A.G.S. மணி கதைகள்

(பாரி நிலையம் வெளியீடு)

பிராட்வே, சென்னை

	Rs P
கரடியின் ஆசை	5.00
தவளை ராஜா	5.00
அதிசயக் கிளி	5.00
ஐந்து விரல்கள்	5.00
சிவப்புக் குல்லாய்	5.00
மாயக் கிழவி	5.00
பேசும் ஆடு	5.00
தூங்கும் அழகி	5.00
ஒரு நாள் ராஜா	5.00
காட்டில் டார்ஜான்	5.00
புகழ்பெற்ற ஈசாப் நீதிக் கதைகள் 1	15.00
புகழ்பெற்ற ஈசாப் நீதிக் கதைகள் 2	15.00
ஔவையும் அதியமானும் (கழகம்)	5.00
பள்ளி நாடகங்கள்	12.50

நூலகப் பதிப்பு: கதைத் தொகுதி

பம்பாய் ராமு முதலிய கதைகள்	15.00
டில்லி ராணி முதலிய கதைகள்	15.00
பேசும் ஆடு முதலிய கதைகள்	20.00
காட்டில் டார்ஜான் முதலிய கதைகள்	20.00
புகழ்பெற்ற படக்கதைகள்; நீதிக்கதைகள்	25.00

தமிழ் கதைப் புத்தகங்கள்:

திருமகள் நிலையம் வெளியீடு

55, வெங்கட்நாராயணா ரோடு, சென்னை—17

தொலை பேசி : 4342899

மயக்கும் கண்ணாடி	5.00
கொள்ளைக்காரன்	5 00

பொன்மீன்	5.00
அவரைக்கொடி	5.00
டில்லிராணி	5.00
செங்கோட்டை யானை	5.00
குதிரை வீரன்	5.00
மரக்குதிரை	5.00
மந்திரி குமாரி மாலா	5.00
ஏழு குள்ளர்கள்	5.00
அலெக்சாந்தரின் கதை	5.00
பம்பாய் ராமு	5.00
அழகி சித்ரலேகா (குழந்தைகள் உலகம்)	5.00
புலி வந்தது (வானொலியில் சொன்ன கதை)	5.00
உலகம் புகழும் எடிசன்	12.50

குழந்தைகள் உலகம்

6-A, Poes Road, M.M. Garden, Madras- 600 018.

Phone: 45 10 67. Bus Stop: Vanavil

வாசகர் எண்ணம்

புது மலர்

புத்தாடை கண்டதும்
பூரிக்கும் பூவையராய்
பூக்கும் புது மலரை
தேடிடும் வண்டுகளாய்
புத்தகத்தை நாடி வரும்
நல்லவரே வாழ்க!
வயிற்றுப்பசிக்கு உணவு
அறிவுப்பசிக்கு நூலகம்
நல்ல நண்பர்களாய்
நாளும் விளங்கிடுமே!

A. G. S. மணி

விந்தன் ஓ, மனிதா

"ராஜ்'

விந்தன் ஒரு விந்தையான மனிதர்.
அவர் மாத்திரம் நம் நாட்டில்

சிறுபான்மை மொழியான தமிழில் எழுதாமல் ஒரு பெரும் பான்மை மொழியில் எழுதியிருந்தால் உலகும் அவரைப் பற்றி பேசியிருக்கும்.

அவர் மாத்திரம் எழுத்தை மதிக்கும் அண்டை மாநில மொழியான மலையாளத்தில் எழுதியிருந்தால் நாடே அவருக்கு தலை வணங்க வேண்டியிருந்திருக்கும். அவர் மாத்திரம் இனப்பற்று மிக்க மக்களின் மொழியான கன்னடத்திலே தன் படைப்புகளை அளித்திருந்தால் அவருக்கு நிறைய கௌரவம் சேர்ந்திருக்கும்.

துர்பாக்கிய வசமாக அவர் தமிழர், தமிழில் மட்டும் தான் படைத்தார். தமிழ் இலக்கிய வட்டத்தில் ஒரு சிலரின் அரை மனதான அங்கீகாரத்தையும், வாசகர் உலகத்தில் ஓரளவு நன்மதிப்பையும் மட்டும் அவரால் அதனால் பெறமுடிந்தது.

ஓ, மனிதா என்ற தலைப்புடன் அவர் வடித்துள்ள கட்டுரைகள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாகவும், நமக்கு அவரை விந்தை மனிதராகவும் தோற்று விக்கின்றன.

இக்கட்டுரைகளில் விலங்கினங்கள், பறவை இனங்கள் மனிதனைக் கேள்வி கேட்கின்றன.

அவை என்ன கேட்கின்றன தெரியுமா?

"**ஓ, மனிதா** நீ உண்மையில் மனிதன் தானா?"

"**ஓ, மனிதா** மானுடம் என்று எதையோ சொல்கிறாயே உனக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?"

"ஆறறிவு படைத்தவன் என்று சொல்கிறாயே? அது எதற்கு? புத்திசாலித்தனமாக, **தோலிருக்க சுளைவிழுங்கியாய்** கொள்ளையடிக்கத்தானா? இல்லை சட்டங்களைச் சொல்லிக் கொண்டு ஒரு பசுத்தோல் போர்த்த புலியாய் பல அக்கிரமங்களைச் செய்யத்தானா?

நம்மை சுற்றியிருக்கும் பல உயிரினங்கள் இப்படி விந்தனின் கேள்விக் கணைகளைத் தொடுக்கும்போது மனித இனத்தவராகிய நாம் பதிலில்லாமல் திணறுகிறோம், ஏனெனில் அவற்றைச் **சந்திக்கும் வாய்மை நமக்கில்லை.**

மானுடத்தை ஒரு சுயசோதனைக்கு உட்படுத்தும் இப்புத்தகத்தை அயல் நாட்டு மண்வாசனையை சிறிது மறந்து படிப்போர் நிச்சயம் பயனடைவர்.

பாடிப் பழகு

பேராசிரியர் தங்க சிகாமணி
57, சானகிராம் காலனி
அரும்பாக்கம்— சென்னை. 106,

1. கிழிக்கலாம்

காகிதத்தைக் கிழிக்கலாம்!
சுந்தைக்குள்ளே வைக்கலாம்!
பந்தைப் போலச் சுருட்டலாம்!
பரந்த வெளியில் ஆடலாம்,

2. வெட்டலாம்

அட்டை ஒன்றை எடுக்கலாம்
அழகு தோன்ற வெட்டலாம்
கோட்டை ஒன்று கட்டலாம்
கூடி நின்று பாடலாம்!

3. மடிக்கலாம்

காகிதத்தை மடிக்கலாம்
கத்திக் கப்பல் செய்யலாம்
காலடித் தண்ணீரில்
கப்பலோட்டிக் காட்டலாம்.

4. ஒட்டலாம்

அட்டை ஒன்றை எடுக்கலாம்
அம்மா படத்தை ஒட்டலாம்
கட்டில் எதிரில் மாட்டலாம்.
காலையில் எழுந்து வணங்கலாம்,



பெயர்: வி எஸ். முத்து.

புனை பெயர்: வி.எஸ் எம்

முகவரி: 126, 'ஓ' பிளாக்'
அண்ணாநகர் கிழக்கு, சென்னை—600102.

பிறந்த தேதி: 10—03—1948.

கல்வித் தகுதி: (எம்.ஏ) வரலாறு.

தொழில்: உதவிக் கண்காணிப்பாளர்
சென்னைத் துறைமுகம் சென்னை—1

பொழுது போக்குகள்:

1. கவிதை எழுதுதல்; சுட்டுரை வரைதல், (குழந்தைகளுக்கான கவிதை நூல்— அச்சில்) 'சென்னைத் துறைமுகம்' இதழ்களிலும், ஆண்டு மலர்களிலும் கவிதைகள் வெளிவந்துள்ளன.
2. ஓவியம் வரைதல், (பெயிண்டிங்' கார்ட்டூன் 'அகில இந்திய பெருந்துறை முகங்கள்' நடத்திய ஓவியப் போட்டியில் முதற்பரிசும் மூன்றாம் பரிசும் பெற்றவை பள்ளிப் பாடப் புத்தகங்களிலும் தனியாகவும் பல ஓவியங்களைத் திட்டியுள்ளவை.
3. சர்வதேச திரைப்படத் திறனாய்வுக் கழகத்தின் துணைச் செயலர்.
4. அகில இந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தில் உறுப்பினராக உள்ளார்.
5. சமூக சேவையில் நாட்டம் உள்ளவர்.

வகுப்பறைக்கு நூலகம்.... தேவையா?

ஒரே வயதுள்ள மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் இருக்கிறார்கள். அவர்கள் விரும்புகிற புத்தகங்களை அவர்களே பார்த்து எடுத்து படிக்கும் பயிற்சியை இளம் வயதிலேயே ஏற்படுத்தி விட்டால், நிரந்தரமாக, சிறந்த வாசகர்களாக அவர்கள் வளர்வார்கள். ஒவ்வொருவனும் அறிஞனாக விளங்க இப்பழக்கம் பெரிதும் உதவும்.

இதை யார் செய்வது?

மாணவர்களுடன் பழகும் ஆசிரியருக்கும், பெற்றோர் களும் குழந்தைகளுக்கு ஏற்ற புத்தகங்களை தேடி கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட புத்தகங்களை அவர்கள் முதலில் படிக்க வேண்டும், சிறப்பைக் கூறி, குழந்தைகளும் படிக்கும் படியாகத் தூண்ட வேண்டும்.

ஏன் செய்ய வேண்டும்?

Child is the Father of Man என்பார்கள், இன்றைய சூழ்நிலையில் குழந்தைகளை ஒன்றுக்கும் ஒதவாத சோம்பேறி களாக— மாற்றும் முயற்சியில் பலரும் ஈடுபடுகிறார்கள், நாம் சுதந்திரத்தை இழந்து மீண்டும் அடிமைகளாக வாழ வேண்டிய அவலநிலை ஏற்படுமோ என்ற அச்சம் நல்லவர் களுக்கு ஏற்பட்டுள்ளது.

நம்மால் முடியுமா?

நாம் முயன்றால் நிச்சயம் முடியும். நம்குழந்தைகள் அறிவு பெற, ஆற்றலுடன் வேலை செய்ய, நல்லவர்களாக வளர புத்தகங்கள் பெரிதும் உதவும். நல்ல புத்தகங்கள் சிறந்த நண்பர்கள் அல்லவா?

ஒரு வரி உண்மைகள்

தமிழின் முதல் கலைக்களஞ்சியம் அபிதான சிந்தாமணி

படியுங்கள்

டாக்டர் பூவண்ணனின்
சிறுவர் இலக்கியக் களஞ்சியம்

தொகுதி-1



தொகுப்பாசிரியர் : வத்சலா பூவண்ணன்
வெளியிடு : பூவண்ணன் பதிப்பகம்
1, பாரதிபூங்கா, 4வது குறுக்குச் சாலை, சாயிபாபா நகர்
கோவை—641011

விலை : ரூ 150 பக்கம் : 320

பூவண்ணன்

இந்தப் பெயர், ஆயிரக்கணக்கான குழந்தைகள் உச்சரிக்கின்ற பெயர்.

பூவண்ணனின் எழுத்துக்கள், குழந்தைகளை மட்டுமல்ல, பெரியவர்களையும் படிக்கத் தூண்டும் சிறப்பைப் பெற்றவை.

அவர் தொடாத துறையே இல்லை. அவர் தொட்ட துறையெல்லாம் துலங்கியிருக்கின்றது. அவர் கைவண்ணத்தில், உருவானவை கணக்கிலடங்கா.

அவர் எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதியிருக்கிறார் என்பது சிறப்பல்ல, அவர் எழுத்தைத் தாங்கியதால் அந்த இதழ்கள் சிறந்தன என்பதே உண்மை.

மாணவப் பருவத்திலிருந்தே எழுதியவர் மட்டுமல்ல 'கரும்பு' என்னும் பத்திரிகைக்கு அப்போதே ஆசிரியராகவும் இருந்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியவர்.

குழந்தை இலக்கிய முன்னோடிகளில் குறிப்பிடத்தக்கவர். இவர் படைத்தவை, குன்றிலிட்ட விளக்காய் ஒளி வீசிக்கொண்டிருக்கின்றன.

இவர் உள்ளமெனும் ஊற்றில் வெளிவரும் குழந்தை இலக்கியம், அருவியென வந்து அரும்புகளை ஆனந்தமடையச் செய்கின்றன.

கடந்த 46 ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி புரிந்து வரும் டாக்டர் பூவண்ணன் அவர்கள் பூப்போன்ற மனம் உடையவர். அந்த மனத்திலிருந்து மணம் பரப்பும் மல்லிகை மலர்களாய், ரோஜா மலர்களாய் வந்தவைதாம் மலர்களும் கதைகளும்.

அவர் படைத்தவை ஏராளம் படைக்க இருப்பவையோ இன்னும் எத்தனையோ... ஆனால், இதுவரை அவர் படைத்த

வற்றை, நாளையத் தலை முறைகளான இன்றைய சிறார்களுக் குக் காணிக்கையாக்க வேண்டும் என்கிற நோக்கில், களஞ்சியங் களாக—கலைக் களஞ்சியங்களாக உருவாகி வருகின்றன. அந்த உருவகத்தின் முதல் தொகுதி, இப்போது வெளிவந்துள் ளது. அது தான் **டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்** தொகுதி 1 (தொகுதி 2-ம் வெளிவந்து விட்டது) (ஆ-ர்) என்பது.

'ஒரு குழந்தைப் பத்திரிகை எப்படி இருக்க வேண்டும்? என்பதற்கு குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் ஒரு பாடலே பாடியுள்ளார்.

"சிறுவருக் கான பத்திரி கைகள்
நிறைய வேண்டும்.
சித்திரம் எல்லாப் பக்கங் களிலும்
திகழ வேண்டும்.
அருமை யான கதையும் பாட்டும்
இருக்க வேண்டும்.
அறிலைப் புகட்டும் கட்டுரை பலவும்
அமைய வேண்டும்"

என்று, இது, இந்த நூலுக்கும் பொருந்தும்.

இதில் பாடல் இருக்கிறது கதை இருக்கிறது. சித்திரக் கதையும் இருக்கிறது. இன்னும் நாடகம், பொது அறிவு, நாவல் என்று எல்லாம் இருக்கின்றது; எல்லாமாகச் சேர்ந்து திகட்டாத விருந்து படைக்கின்றது.

இந்த நூல் 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதியில், பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. மொத்தம் ஏழு பாடல்கள்—ஒவ்வொரு பாட்டின் பக்கத்திலேயே எழில் மிகு சித்திரம் முழுப்பக்க அளவில் இதோ ஒரு பாடல்.

உழைத்தல் வேண்டும்
உழைத்தல் வேண்டும்
ஊறும் எறும்பாய்
உழைத்தல் வேண்டும்

என்று உழைப்பின் பெருமையைப் பிஞ்சு உள்ளங்கள் உணரு மாறு கூறுகின்றார் கவிஞர். இதே போல 'தேனீ போலச் சேர்த்தல் வேண்டும்' என்னும், 'பசுபோல் ஈதல் வேண்டும்' என்னும் அழகாகக் கூறுகிறார்

அடுத்த பகுதி சிறுகதையைப் பற்றியது. இதில் ஆறு சிறு கதைகள் உள்ளன. அனைத்தும் மனத்தைக் கவரும் கதைகள்; நம்மை நல்வழிப்படுத்தும் நீதிக்கதைகள். இதிலும் முழுப் பக்கப் படங்கள் உண்டு.

சித்திரக்கதைகள் என்றால், யாருக்குத்தான் பிடிக்காது. அதுவும் இதிலே உண்டு. கதையின் பெயர் ''மின்னல் வீரன்'' தலைப்பே நம்மைப் படிக்கத் தூண்டும்.

அடுத்த பகுதியில் வருவது, நாடகம். நேரு மாமாவைப் பற்றியது. 1964இல் சென்னை வானொலியில் ஒலிபரப்பானது. பல மேடைகளில் நடந்து பலரின் பாரட்டுதல்களைப் பெற்றது குழந்தைகள் மனத்திலே இடம் பிடித்த இந்த நாடகம் நடிக்க மட்டுமல்ல, படிக்கவும் ஏற்றது.

பகுதி—4இல் இடம் பெறுவது தான் 'பொது அறிவு' ஆகும் இதில் உள்ள ஒவ்வொன்றும், உங்கள் பொது அறிவைச் சோதிக்க உதவும் புதிர்க் கதைகள். எல்லாச் கதைகளும் சுவை யானவை, கதை முடிவில் கேள்வி உள்ளது. பதில் நீங்கள் நன்றாக யோசித்துச் சொல்ல வேண்டும். அப்படியும் தெரியா விட்டால் அடுத்த பக்கமே விடையும் இருக்கிறது.

ஐந்தாவது பகுதிதான், நாம் ஆவலாக எதிர்பார்க்கும் நாவல், தலைப்பு, 'காளித்தம்பியின் கதை' படிக்க விறுவிறுப் பூட்டும் காட்சிகள் இதில் நிறைய உண்டு. கதாபாத்திரங்கள் வாயிலாக பல அரிய உண்மைகளை ஆசிரியர் வெளிப்படுத்தும் அழகே அழகு!

'தோன்றிற் புகழொடு தோன்றுக'

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க; ஒவ்வொருவரும் புகழ் பெற்று விளங்க வேண்டும். அதுவும் சொந்தப் புகழ் பெற

வேண்டும்; சொந்தக்காலில் நிற்க வேண்டும். பெற்றோரின் புகழால் பெருமையடையக் கூடாது என்பதைச் சொல்லாமல் சொல்லும் இந்த நாவல் குழந்தை மனத்திலே தன்தம்பிக் கையை வளர்க்கின்றது.

அருமையான அற்புதமான தொகுப்பு இந்தக் களஞ்சியம், இது, காலமெல்லாம் மழலைகளின் மனத்தை மகிழ்விக்கும். அது மட்டுமல்ல, குழந்தை இலக்கியம் குறித்து ஆய்வு செய் வோருக்கு இது மிகச்சிறந்த கையேடாகவும் விளங்கும், பள்ளி-கல்லூரிகளில் இதைப் பாட நூலாகவும் வைக்கலாம். சுருக்கமாகசொன்னால் பூவண்ணனின் புகழை இது பாறை சாற்றிக் கொண்டே இருக்கும் -பூவுலகம் உள்ளவரை இந்நூல் தொகுதிகள் அவரது பெயரைச் சொல்லிக் கொண்டே இருக்கும்.

—மழலைக் கவிஞர்

பி. வி. கிரி

எஸ். ஆர். ரங்கநாதன் ஆத்மாவிடம் கேள்வி கேட்கலாம்.

SRR இப்போது உயிருடன் இருந்திருந்தால் நீங்கள் அவரிடம் என்ன கேள்வி கேட்டு இருப்பீர்கள் உங்கள் மனதில் தோன்றும் நியாயமான நூல் நூலக இயக்கம் பற்றிய கேள்வி களை தபால் காட்டில் எழுதிப் போடுங்கள்.

அதற்கு டாக்டர் எஸ். ஆர் ஆர். ஆத்மாபதில் சொல்லும்.

உங்கள் கேள்விகள் ஏப்ரல் 30 1996க்குள் எங்களுக்கு கிடைக்க வேண்டும் என்பது முக்கியமாகும் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி,

டாக்டர், எஸ். ஆர். ஆர். ஆத்மா பதில்கள்
நூலகம் இலக்கியம், 6, மு.வ. தெரு.
அரும்பாக்கம். சென்னை— 600 106,

பாலகுமாரனின் சேக்கிழாரின் பெரிய - புராணக்கதைகள்

வெறும் பழங் கதைகள் அல்ல அவை நம்முடைய **வேர்கள்**, **ஆணிவேர்கள்**, நம்முடைய **பண்பு**, **கலாச்சாரம்** தார்மீக உணர்வுகள் வளர அடிக்கோலியவை.

நம்மையறியாமலேயே நம் **ஊனுடனும் உயிருடனும்** கலந் திருப்பவை.

இக்கதைகளின் நாயர்கள் நாயகியின் வாழ்வினை, அவர் கள் வாழ்வின் பெரும் பொருளாய் விளங்கிய **ஆன்மிகத்** தேடலை, அந்ததேடலின் முடிவில் அவர்களே தெய்வங்களுடன் இரண்டறக் கலந்த நிகழ்வுகளை, மானுடம் உயரும் போது தெய்வீகமாகும். தத்துவத்தை இக்கதைகள் தெளிவாக்கு கின்றன.

சேக்கிழார் பெருமானின் கரைக்கால் அம்மையார், திரு மூலர், மூர்த்தி நாயனார், மானக் கஞ்சாற்நாயனார், குங்கிலயக் கலய நாயனார், சண்டேஸ்வர நாயனார், மெய்ப் பொருள் நாயனார், சிறுத்தொண்டர், கண்ணப்ப நாயனார், திருநீலகண்டன், தண்டியடிகள், இயற்பகை நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் சரிதங்களை உள்ளடக்கிய பெரிய புராணச் கதைகளை **இத்தலை முறையினருக்கு சந்துண வாய் அளித்துள்ள பாலகுமாரனின் எழுத்துப்பணி போற்றத்தக்கது,** பணிவுடனும் பக்தியுடன் வணங்கி ஏற்றுக் கொள்ள வேண்டியது.

வெளியீடு: **விசா பதிப்பகம்**
55, வெங்கட்நாராயணா சாலை
தியாகராயநகர் சாலை
சென்னை-600 017
தொலைபேசி: 434 2899

செப்டம்பர் 1995-ப 272. ரூ. 43

கோகுலத்தில் நூலகம்

அ. கப்பையன்

பள்ளிக் கூடமும் நூலகமும்
படிப்பவர்க் கிரண்டு
கண்களென
கல்லா தாரும் அறிவாரே;
கற்கை நன்றென
உணர்வாரே!
அகர முதல எழுத்தெல்லாம்
அறியச் செய்வது
பள்ளியெனில்
சகலமும் அறிந்த மேதையென
கற்றிடச் செய்வதும்
நூலகமே!
ஆசான் இன்றிச் கற்றிடவும்
அனுபவ அறிவு
பெற்றிடவும்
தேச நட்பு தெரிந்திடவும்
தினமும் உதவிடும்
நூலகமே!
வயது வரம்பு கிடையாது:
வாழ்க்கை வசதி
தேவையில்லை!
சுயமாய் கற்றுத் தேர்ந்திடலாம்
சுகந்திர புருஷனாய்த்
திகழ்ந்திடலாம்!
பள்ளிக் கல்வி மட்டும்தான்
பயன்தரும் என்று
எண்ணாதீர்!
உள்ள படிக்கும் நூலகம்தான்
உதவிடும் என்பதை
மறவாதீர்!
நூலகம் இல்லா ஊரினிலே
நுழைதல் கூடபாவமெனும்
காலம் ஒருநாள் வரக்கூடும்;
கண்டு தெளிவீர் தம்பிகளே!
பள்ளிகள் போலும் நூலகமும்
பரந்து விரியச்
செய்திடுவோம்;
இல்லா ஊரே இல்லையென
எங்கும் நூலகம்
அமைத்திடுவோம்!

நூலிடையில் நூறு சுகமே

கவிஞர் நாகைகாந்தி

நூலகமே இலக்கியமே
நூலிடையில் நூறு சுகமே
வாசல் தோறும் வாழ்த்துப்பாடுமே
வசந்தகாலமே வந்துசேருமே
குடும்பமென்பதே பல்கலைக்கழகம்
கும்பிடும்தெய்வம் தொழில்கலைக்கூடம்
வாழ்க்கையை படித்திடு வரலாறாகும்
வாழ்ந்து பார்த்திடு நூலகமாகும்
கற்றோர் என்பவர் கண்ணுடையர்
மற்றோர் இரண்டு புண்ணுடையர்
செந்தமிழ்ப் புலவன் செந்நாப்போதான்
செகத்தின் செவிக்கே சிந்துபாடினான்
நவில்தொறும் நூலின் நயமே
பயில்தொறும் நூலிடை லயமே
விருப்பமே விருந்துக்கு உகுவது
நெருப்பிலே குளிக்காத நிலவிது

ரூ. 5 கோடி செலவில் சர்வதேச நூலகம்...

அன்று இதற்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தினோம். இன்று நூலகச் சேவை நடக்கிறது.

நூலக அமைப்பு

மத்திய அரசு இதற்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கியது. அதன் ஒரு பகுதியாக ரூ. 5 கோடி செலவில் சர்வதேச நூலகத்தை கட்டி உள்ளோம். இந்நூலகத்தின் வடிவமைப்பு பழமையும், புதுமையும் இரண்டறக் கலந்து அமைத்துள்ளோம்.

'சர்வதேச பத்ர' என்னும் பண்டைய சிற்ப நூல் கூறும் கூட்டல் குறி வடிவத்தில் நூலகம் கட்டிடம் 3 மாடி கட்டிமாகவும் மேல் தளந்தில் நடுவில் மகாமேரு மணிமண்டபமும் அமையப் பெற்று உள்ளது.

மேல் தளத்தில் மகாமேரு மண்டபத்தை சுற்றிலும் பண்டைக்கால கட்டிட சிற்ப கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் காஞ்சிகைலாசநாதர் கோவிலில் உள்ளது போல கலைநயம் மிக்க 60 தியான மண்டபங்கள் கட்டி இருப்பது இந்நூலக கட்டிடத்திற்கு அழகூட்டுகிறது.

5 லட்சம் நூல்கள்

52 ஆயிரம் சதுர அடி பரப்பில் உருவாக்கப்பட்டு உள்ள இந்த நூலகம் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாக திகழும். 5 லட்சம் புத்தகங்கள் இந்த கட்டிடத்தில் வைக்கும் அளவுக்கு கட்டப்பட்டு உள்ளது.

தமிழ், தெலுங்கு, இந்தி, சமஸ்கிருதம் உள்பட பல்வேறு மொழிகளிலும் உள்ள சிறந்த நூலகளும் இங்கு இடம் பெற உள்ளன.

விஞ்ஞானம், பொது அறிவு, கதை, கட்டுரை நூல்களும் இந்த நூலகத்தில் இருக்கும். அதோடு கலை, கலாச்சாரம், சிற்பக்கலை, சாஸதிரம், இலக்கியம், நாட்டியம், கூத்து போன்ற அனைத்து துறை நூல்களும் இந்து, இஸ்லாம்,

கிறிஸ்துவ, சீக்கியர் மற்றும் உலகத்தில் உள்ள அனைத்து மத சம்பந்தப்பட்ட நூல்களும் இந்த நூலகத்தில் இடம் பெறும்.

நூலகத்தின் ஒரு புறம் இந்து மத நூல்கள் நிறைந்திருக்கும் மறுபுறம் ஏனைய மத நூல்கள் இடம் பெறும். மூன்றாம் பகுதியில் இறையுணர்வின் அங்கங்களான இசை, சிற்பம், நடனம், ஓவியம், மருத்துவம், முதலிய துறை சார்ந்த நூல்களும் இருக்கும்.

நான்காம் பகுதி மினி சினிமா, ஆடியோ, வீடியோ நூலகம் பகுதியாக அமையும். 150 பேர் வரை அமர குளிர் சாதன வசதியுடன் கூடிய கருத்தரங்கு மண்டபமும், 20 பேர் கலந்து கொள்ளவல்ல இரு கலந்துரையாடல் கூடங்களும் மூன்றாம் தளத்தில் அமைக்கப்பட்டு உள்ளன.

பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழங்கால ஓலைச் சுவடிகள் வைக்கப்பட உள்ளன. இந்த ஓலைச் சுவடிகள் பல நூறு ஆண்டுகள் ஆனாலும் அது கெடாத வண்ணம் பாது காப்பாக வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் காஞ்சி முனிவர் கூறினார்.

இளைய சங்கராச்சாரியார் விஜயேந்திர சரஸ்வதி சுவாமி களும் விழாவில் பேசினார்.

விழாவில் சென்னை தொழில் அதிபர் ஏ.சி. முத்தையா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காஞ்சி மண்டல மேலாளர் ஆர். எஸ். நம்மாழ்வார், இந்தியன் வங்கி மண்ட மேலாளர் எஸ் லட்சுமணன், காஞ்சிபுரம் தொழிலதிபர்கள் எஸ் சோகன்ராஜ் எஸ். ரவிச்சந்திரன், ஏ.வி. சந்திரசேகரன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடக்கத்தில் சந்திர சேகரேந்திர விசுவ மகா வித்யாலயா தலைவர் வெங்கட்ரமணா வரவேற்றார்.

ஜனாபதி சர்மா வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார். வளரும் பொது நூலகங்கள் நாளும் வளரட்டுமே!

இணையிலா மனிதர் ஏவி. எம்.



தமிழ்த் திரையுலகில் முடிசூடா மன்னராக விளங்கியவர் திரு. ஏவி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் வாழ்க்கையில் பல சோதனைகளைக் கடந்து, தமிழ்த்திரையுலகில் சாதனை படைத்தவர் அவர் செயல் பட்ட பல நிகழ்ச்சிகளை இந்நூலில் நூலாசிரியர் பூச்சரம் போல் தொகுத்துத் தந்திருக்கின்றார்.

காரைக்குயில் ஓலைக் குடிசையில் படம் எடுத்தது முதல் வடபழனியில் ஸ்டுடியோ அமைத்தது வரை அவருடைய உழைப்புக்கு ஈடு இணை இல்லை என்பதைத் தெளிவாகக்கூறி யிருக்கிறார்.

விடுதலைப் போர்க் காலத்தில், பாரதியாரின் பாடல் களைப் படத்தில் புகுத்திய பெருமை நாட்டுப்பற்று மிக்க மெய்யப்பரையே சாரும். அந்த நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாமல் தொகுத்திருக்கிறார் ஆசிரியர்.

குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தை இலக்கியப் போட்டியில், இரண்டாம் பரிசு— வெள்ளிப்பதக்கம் பெற்ற இந்த நூலுக்கு, திரு ஏவி. எம். சரவணன் அவர்கள் அணிந்துரை வழங்கிப் பாராட்டியுள்ளார்.

'முயற்சி திரு வினையாக்கும் என்று சொல்லாமல் சொல்வம் அவரது வாழ்க்கை, இளைய சமுதாயத்தினரை ஊக்குவிக்கும், உத்வேகமளிக்கும், உயர்த்தும் அதற்கு இந்த நூல் உறுதுணையாக இருக்கும் என நாம் நம்பலாம்,

ஆசிரியர்: **பி.வி. கிரி**

வெளியீடு: திருமலைப் பதிப்பகம்

N-பிளாக்: 385.

அண்ணா நகர் கிழக்கு,

சென்னை— 600 102.

பக்கம் 96 விலை: ரூ. 15.

தொலைபேசி :

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் ஆத்மாவிடம் இந்த மாதம் போட்டிகண்டுள்ளோம். நாங்கள் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் அண்ணாவின் ஆத்மா சற்று விளக்கமான பதில் தந்தது, சில பதில்கள் ஏக்கம் வெளிப்பட்டது. அந்த சுவையான போட்டியை இனி தொடருங்கள்.

நல்லவர்கள் தான் தலைமை ஏற்கவேண்டும் என விரும்பும் அலர் ஆத்மா, ஆங்கிலம் மட்டுமே என்பவர்களை குப்பைகள் என்கிறது,

திருக்கழுகுன்றத் திருத்தலப் பெருமை



ஆசியர்: பி. வி. கிரி

வெளியீடு: திருமலைப்பதிப்பகம்
N-பிளாக்: 385
அண்ணா நகர் கிழக்கு
சென்னை — 600 102.

பக்கம்: 72 விலை: ரூ. 12 தொலைபேசி:

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. அத்தகைய கோயில்களில் பேரும் புகழும் பெற்று விளங்குவது, செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில்.

வேதமே மலையாக உருவெடுத்து, அங்கு ஈசன் வீற்றிருக்கின்ற காட்சி கண்கொள்ளாக காட்சியாகும் ஆதலின்,


இங்குள்ள இறைவனுக்கு வேதகிரி என்னும், வேதாசலம் என்னும் பெயர் வழங்கலாயிற்று. மலையடிவாரம் வேதபுரி என வழங்கும் பாடல் பெற்ற தலமான இது, பல வகைகளில் சிறப்புற்று விளங்குவதை நூலில் அழகுறச் சித்திரித்துக் காட்டுகின்றார் ஆசிரியர்.

பன்னெடுங்காலமாக வேளை தவறாமல் வருகின்ற கழுகுகளை இங்கே இன்னும் பார்க்கலாம். அதனால் 'கழுகு தொழு வேதகிரி' என்று பாடினார் அருணகிரி நாதர்.

இந்த நூலில் மொத்தம் பத்து அத்தியாயங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் இறைவனின் மகிமையைப் பறை சாற்றும் வண்ணம் அமைந்துள்ளன. பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு முறை இங்குள்ள திருக்குளத்தில் சங்கு பிறக்கின்ற காட்சியை ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

எளிய இனிய நடையில், எல்லாத் திறத்தாரும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் நூல் அமைந்துள்ளது பாராட்டுக்குரியது.

—ஞானி



நூலக பஞ்ச சீலம்

நூல்கள் - விமர்சனம் - நூலகம்

பொள்ளாச்சி நசன்

''அறிவுத்தேடலுக்கான அட்சயபாத்திரம்'' நூலகங்களாகும். இங்கு வரிசை வரிசையாக பல்வேறு வகையான நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்நூல்கள் சட்டம், மருத்துவம், வரலாறு, மொழியியல் எனப் பல்துறை சார்ந்தவைகளாக இருக்கின்றன. எல்லாத் துறைகளிலும் ஈடுபாடும், நுட்பமும் உடையவர்கள் மிகச் சிலரே. எனவே நூலகத்திலுள்ள அனைத்து நூல்களும் ஒருவரால் முழுமையாக வாசித்து உணரப்பட முடியுமா? என்பது கேள்விக்குறியே.

வாசிப்பு என்பது இனிமையானது; சுகம் தருவது. வாசித்து உணர உணர புதுப்புது உலகத்தைக் காட்டுவது. வாசிக்கும் ஒருவருக்கு அவர், வாசிப்பதால் ஏற்படும் நேர இழப்பும் / பொருளிழப்பும் மிகச் சாதாரணமாகி அறிவுத்தேடலுக்கான தளம் அமைந்துத் தருவது. புதிய புதியசெய்திகளை வாசித்து உணரும்போது ஏற்படும் அனுபவம் கிடைத்ததற்கரியது. இந்த வாசிப்பு என்பது தனிமனித ஆர்வத்தேடலின் இனிய நிகழ்வு.

வாசிப்பு என்பது தொடர்ச்சியானதாக இருக்க வேண்டும். ஆரம்பத்தில் அவர் வாசிப்பதில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். பொதுவான அடிப்படை செய்திகளை முதலிலும். பிறகு இலக்கை வரையறை செய்து கொண்டு அது தொடர்பாக இதுவரை வெளியாகியுள்ள செய்திகளையும் (நூலகங்கள் இதற்கு உதவும்), பிறகு இலக்கு ''நோக்கிய புதிய/ஆய்வுச் செய்திகளையும், (இதழ்களும், துறைநூல்களும் இதற்கு உதவும்) வாசித்து அவரைச் சிறப்பாகச் சிந்திக்க வழி வகுக்கிறது. முறைப்படுத்தப்பட்ட / இலக்கு நோக்கிய வாசிப்பானது அவருக்கு அத்துறையில் நுணுகிக் காண வழி வகுக்

கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அவரது வாசிப்பு அவருக்குத் தரமான அடிப்படைச் செய்திகளை அவருக்குள் ஆக்குகிறது. அவரது அனுபவமும் ஆய்வும் அந்த அடிப்படைகளின் மேல் 'கருத்துருவாக்கம்' ஏற்பட வழி வகுக்கிறது. இப்படிக் கருத்துச் செறிவேறியவர்கள் தனது அடைவுகளை எழுத்துவடிவில் பதிவாக்குகிறார்கள். இப்பதிவே தரமான நூல்கள் உருவாக வழிவகுக்கிறது.

வாசிப்புத் தன்மை தற்போழுது, குறைந்தே காணப்படு கிறது. மேலும் வாசிப்புத் தன்மை நுணுக்கிக் காணப்படா மல், மேலோட்டமாகவே உள்ளது. பாலியல் செய்திகள், மர்மக்கதை, படக்கதை, துணுக்குச் செய்திகள், சினிமாச் செய்திகள், பிறர் பற்றிய சிண்டுமுடிதல்கள் என ஆழமில்லாத மேம்போக்கான செய்திகளே பொதுவாக அனைவராலும் விரும்பி வாசிக்கப்படுகின்றன. மூளைச் செலவில்லாத எளிய/ பொழுதுபோக்கு வகைகளே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. நுனிப்புல் மேய்கிற, சாதாரண தன்மையே அனைவரிடமும் காணப்படுகின்றன. நூலகத்திலும் இவ்வகையான நூல்களே பெரும்பாலும் உபயோகப் படுத்தப் படுகின்றன. மற்றவகை யான நூல்கள் தொடப்படுவதே இல்லை.

தற்போழுது பெருகிவரும் கம்பிவழி/வின்வழித் தொலைக் காட்சி, திரைப்படங்கள்—போன்றவைகளால் நூலகங்களின் பயன்பாடு மேலும் நலிவு படுத்தப்படுகின்றன. இது ஒரு இழப்பே. இந்த ''வாசிப்புத் திறனிழப்பு'' எதிர்காலச் சந்ததி யினரின் அறிவு முன்னேற்றத்திற்குத் தடைக் கற்களாக இருக் கும் என்பதில் சந்தேகமில்லை.

நூலகத்திலுள்ள நூல்களை பொதுவாக 4 வகைகளுக்குள் அடக்கலாம். 1) சுயபுராணம் பாடுபவைகள் 2) படைப்பாளிக் குத் தெரிந்தவைகளை எல்லாம் அள்ளித் தெளித்துள்ளவைகள் 3) குறிப்பிட்ட இலக்கு நோக்கியவைகள் 4) நுட்பமான /ஆய்வுச் செய்திகளுடையவைகள்.

ஆரம்பநிலை வாசகர் ஒருவர் நூலக நூல்களைப் படிக்கும் போது அது பெரும்பாலும் சுயபுராணமாகவும், தெளித்தலை களாகவுமே இருப்பதால், அந்த வாசகர் வாசிப்புத் தன்மையை விட்டு விலகுகிறார்.

இவ்வகையான நூல்கள் வாசகருக்குச் சோர்வு உண் டாக்கி, எதிர் விளைவை ஏற்படுத்துகின்றன. இலக்கு நோக்கிய /நுட்பமான ஆய்வுச் செய்திகளை உள்ளடக்கிய நூல்கள், சிறப்புத் தன்மையை உள்ளடக்கியதாக இருப்பதால் ஆரம்ப கட்ட வாசகர்களுக்குப் பல புரியாத செய்திகளைக் காட்டி குழப்புகிறது. இதுவும் எதிர் விளைவையே ஏற்படுத்துகிறது. நூலகங்களில் அடுக்கப்பட்ட நூல்களுக்கிடையில் ஒவ்வொரு வாசகரும் ''அன்னப்பறவை'' போலச் செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இத்தகைய, தரமானவற்றைத் தேர்ந் தெடுக்கும் தன்மையானது அனைவரிடமும் காணப்படுவது இல்லை.

வெளியாகுகிற அனைத்து நூல்களையும் வாசித்து, சரியானவற்றைத் தேர்வு செய்து உள்வாங்கும் தன்மைக்கு அதிக நேரவிரையமாகும். இதைத் தவிர்க்க வெளியான / வெளி யாகும் நூல்கள் பற்றிய விமர்சனம் அவசியமாகிறது. தற் பொழுது வெளியாகும் எல்லா இதழ்களிலும், சிலபக்கங்களில் நூல் பற்றிய விமர்சனம் வெளியிடப்படுகிறது. நூல்கள் விமர் சனத்திற்காக மட்டுமே சில இதழ்கள் வெளியாகியுள்ளன. சென்னையிலிருந்து என். ராமரத்தினம் அவர்களால் 'புத்தக உலகம், என்ற இதழும், தென்மொழிகள் புத்தகம் டிரஸ்ட் சார்பில் 'புத்தக நண்பன், என்ற இதழும் வெளியாகியுள்ளன. 1972 இல் ராஜன்னன் அவர்களால் 'நூலகர் ஓலை' என்ற இத ழும் 1984—?8களில் ரா. சீனிவாசன் அவர்களால் 'புத்தக விமரி சனம்' என்ற இதழும், 1984இல் பாலசூரியன் நடத்திய 'நூல் நயம்' இதழும், புதுடெல்லி தேசிய புத்தக நிறுவனம் சார்பில் வெளியான 'என். பி. டி. செய்தி மடலும்' இது தொடர்பான இதழ்களாகும். இந்த வகையில் தான் தற்போழுது, டாக்டர். பா. பெருமாள் அவர்களால் 'நூலகம் இலக்கியம்' என்ற இதழ்

தொடங்கப்பட்டு, இதுவரை 6 இதழ்களை வெளியிட்டுள்ளது. (பட்டியலில் விடுபட்ட இதழ்கள் இருக்கலாம்; இருந்தால் தகவல் தரவும்.) NCBH-இன் உங்கள் நூலகம் பல உருமாற்றம் பெற்று தற்போது வெளிவருவதாகத் தெரியவில்லை.

1966-75 நூலகம் மாத இதழ் குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு 1969-71-இல் Managing Editor ஆக பணியாற்றியவர் நூலகஞானி டாக்டர் **பார்த்தசாரதி பெருமாள்**. (வைணவக் கல்லூரி நூலகராக பணியாற்றிய காலத்தில்

வெளியாகுகிற நூல்களைப் பற்றிய தகவல்களைக் குறிப்பிடும் போது அந்த நூல்களுக்கான விற்பனைப் பிரதிநிதி போலச் செயற்பாடாது, ஆய்வு நோக்கில் அதில் உண்மைத் தன்மையை குறிப்பிடுவதாக இருக்க வேண்டும். சில விமர்சகர்கள் நூல்களை விமர்சிக்கும் போது, தங்களது அறிவுஜீவிதத் தனத்தை வெளிப்படுத்துவதாகக் குறிப்பிட்டு, அதன் உண்மைத் தன்மையை மழுங்க அடித்து விடுகிறார்கள். இவ்வகையான விமர்சகர்கள் ஆரம்ப கட்ட வாசகர்களுக்கு எதிர் விளைவையே ஏற்படுத்துகிறார்கள்.

நல்ல நூல்களை சுவையாக, எளிமையாக சுருக்கமாக விமர்சிக்கிற தன்மை, நூல்களுக்கான வாசகர்களை அதிகப் படுத்துவதாக அமையும் வாசகர்களின் ஆர்வம் மிகுதியாகி, தேடுதல் உண்டாக நூலகங்களின் முழுப் பயன்பாடு ஏற்படும். இத்தகைய பயன்பாடு மேலும் தரமான நூல்கள் உருவாக வழிவகை செய்யும். ஆக நூல் விமர்சனம் என்பது ''மிக மிகத்'' தேவையானது நூலகங்கள் முழுமையாகப் பயனாக இத்தகைய விமர்சனங்கள் பேருதவி புரிகின்றன.

ஆக நூலகங்களின் முழுமையான பயன்பாட்டிற்கும், தரமான நூல்களின் உருவாக்கத்திற்கும், சரியான நூல்விமர்சனம் தேவையானதே.

துலாக்கோல் போல விமர்சனங்கள் உருவாகட்டும்.

நூலகத் தந்தை அரங்கநாதன் வாழ்க்கைக் காவியம்

முத்தமிழ்க் கவிஞர்
டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

1. குழந்தைப் பருவம்

முன்னுரைகள் முயன்றாலும் ஒளிரும் முத்தை
முற்றிலுமே விளங்கவைக்க முடிவ துண்டா?
தன்னுடைய வரலாற்றை எழுதி வைக்கத்
தகுதிமிக்க வானத்தை வருக என்பேன்!
என்னுடைய கவிதைகளால் எட்டிப் பார்க்க
இமயத்தை வரச்சொல்லி வணங்கு கின்றேன்!
நன்மைதரும் நூலகத்தை வளர்த்த தந்தை
நல்வாழ்வை எழுதிவைக்க முயற்சி செய்தேன்!

நானுமொரு நூலகராய் இருந்த தாலே
நன்றிசொல்லும் கடமையினை ஒற்றுக் கொண்டேன்!
மீனுக்குத் தண்ணீரே மூச்சாம்! இந்த
மேதைக்கோ நூலகமே மூச்சு! வாழ்வில்
ஆனமட்டும் நூலகத்தின் வளர்ச்சிக் காக
அரும்பாடு பட்டுவந்தார்! மனித ருக்குள்
யானையென வாழ்ந்ததனால் மறைந்த பின்னும்
அவருடைய தத்துவங்கள் வாழக் கண்டோம்!

வறுமைகளின் வரிசையிலே எதுவந் தாலும்
வருத்தமில்லை! அறிவுமட்டும் வரவே வேண்டாம்!
பொறுமைகளின் பட்டியலில் எதுவந் தாலும்
பொறுத்திடலாம்! அறியாமை வரவே வேண்டாம்!
அறிவியலால் அண்டமெல்லாம் ஆய்ந்து பார்க்கும்
ஆய்வாளர் நடுவினிலே நூல கத்தை
அறிவியலில் ஒன்றாக எடுத்துக் காட்டி
அகிலத்தை வியக்கவைத்தார் அரங்க நாதன்!

ஊற்றுக்கால் உபயமே தாந்தம் என்னும்
ஊருக்கு வரலாற்றில் மகுடம் கண்டோம்!
ஆற்றுக்கால் பாசனத்தின் அறிமு கம்போல்
அறிவுக்கால் பாசனங்கள் நிகழக் கண்டோம்

ஏற்றக்கால் எப்போதும் இறைக்கும் ஊரில்
'இராமாமிர் தம்'என்பார் பயிர்கள் செய்தார்!
சீற்றக்கால் ஒருநாளும் காட்டி டாத
சீதாலட் சுமியைத்தம் *துணையாய்க் கொண்டார்!

வால்மீகி எழுதிவைத்த இராமன் வாழ்வை
வாழ்கிறவர் பலருக்கும் சொல்லி வந்தார்!
நாள்தோறும் இராமாய ணத்தைச் சொல்லும்
நாக்குவன்மை கண்டுபலர் மயங்கி னார்கள்!
பால்போலும் வெள்ளை உள்ளம்! ஒழுக்கம் மிக்க
பண்புகளால் பழம்போலத் திகழ்ந்தி ருந்தார்!
ஆல்போலும் எண்ணங்கள் கொண்ட தாலே
அந்நாளில் இவர்நிழலில் பலர் அமர்ந்தார்!

ஆயிரத்தொண் ணூற்றுத்தொண் ணூற்றி ரண்டாம்
ஆண்டினிலே ஆகஸ்ட்டில் ஒன்பதாம்நாள்
பாயுமொரு கடல்போன்ற மகிழ்ச்சி பெற்றார்!
பகலவன்போல் ஆண்குழந்தை பிறக்கக் கண்டார்!
சேயுடனே கொஞ்சுகின்ற தாயார் தந்தை
சிரித்தபடி வைத்தபெயர் அரங்க நாதன்!
வாயினிலே அழைக்கின்ற போதே நெஞ்சில்
மழைபோலத் தேன்வந்து பொழியக் கண்டார்!

சின்னமுகம் சின்னவிழி பார்த்துப் பார்த்தே
திசையெல்லாம் புகழ்வந்து குவியும் என்றார்!
கன்னங்கள் குழிவிழுந்தால் உலக மெல்லாம்
கவர்கின்ற பெருந்திறமை சேரும் என்றார்!
பொன்னுக்கு மயங்காமல் அறிவைத் தேடிப்
புதுமைமிக்க சாதனைக்கே உழைப்பான் என்றார்!
இன்றிவனைப் பெற்றதனால் இன்பம் எல்லாம்
எம்வீட்டில் வந்ததென்றே முத்த மிட்டார்!

தொட்டிலிலே சிறுகுழந்தை! அறிவுத் தந்தை
தோள்மீது செல்வமிவன்! தாயார் ஆசைப்
பட்டியலில் மாணிக்கம்! வளர்க்கும் பாட்டி
பாசத்தில் மிதக்கின்ற படகு! மாமன்
கட்டிவரும் கனவுலகில் தங்கக் கோட்டை!
காண்பவர்கள் எல்லோர்க்கும் அழகன்! கையைத்
தொட்டுவரும் உறவினர்கள் நடுவில் இன்பம்
தொடர்ந்துவர நம்புக்கை ஊட்டி வந்தான்!

*முதல் (ஆ-ர்)

கண்ணுக்குள் வளர்த்தார்கள்! வைரம் கூடக்
காசுக்குக் கிடைத்துவிடும் என்று சொன்னார்!
மண்ணுக்குள் கிடைக்காத செல்வம்! இந்த
மாநிலத்தை வாழவைக்கும் புதையல் என்றார்!
விண்ணுக்குப் போனாலும் இவன்போல் இங்கே
விளைந்துவந்து கரும்புண்டா? நெல்தான் உண்டா?
பண்ணுக்குப் பண் இவனே! ஆடு கின்ற
பாதத்தில் நிகழ்த்துகின்ற கூத்தே! என்றார்!

அம்புலியைக் காட்டுகின்ற போதே அன்னை
அறிவூட்டும் நல்லகதை சொல்லி வந்தாள்!
கம்பியிலே மின்சாரம் பாய்ந்தாற் போலக்
கதைகளினால் ஊக்கத்தைப் பெற்றான் பிள்ளை!
தும்பியெனப் பறக்கின்ற வயது! தந்தை
சொல்கின்ற கதைகேட்கச் சுற்றி வந்தான்!
கொம்பினிலே கொடியேறிப் படரக் கண்டு
குறிக்கோளில் நெஞ்சத்தைப் படர வைத்தான்!

கல்வியினால் சிறப்புவரும் என்று தந்தை
காட்டிவந்தார்! அவர்பேச்சைக் கேட்ப தற்குச்
செல்வர்கள் சூழ்ந்துவந்தார்! வயதில் மூத்தோர்
திரண்டுவந்தார்! இளையவரும் சேர்ந்து வந்தார்!
எல்லையிலாக் கல்வியினை வாரிக் கொள்ள
இளம்பிஞ்சின் இருசெவியும் முந்தி நிற்கும்!
வல்லவனாய் நல்லவனாய் வருங்கா லத்தில்
வாழவதற்கே தந்தைதினம் சொல்லி வைத்தார்!

ஆறுவய தானவுடன் குழந்தை கண்ணில்
ஆறுவர நேர்ந்ததுவாம்! மழலைச் சொற்கள்
மாறுகின்ற போதினிலே துன்பம் வந்து
மடிமீது தூக்கிவைத்துக் கொள்ளும்! அன்பில்
ஊறுகின்ற தந்தையினைப் பறிகொடுத்தான்!
உதடுகளால் அழைத்திடவே அப்பா இல்லை!
கூறுகின்ற செய்தியிலே கொடிய செய்தி
குழந்தையென்றும் பாராமல் காலன் தந்தான்!

(வளரும்)

நூலக மேதை

D. சுப்பையா, கோவை

மாஸ்கோவில் உள்ள லெனின் நினைவு நூலகம் தான் உலகத்திலேயே மிகப்பெரிய நூலகமாகும்.

அந்தக் கட்டிடம் 302 மீட்டர் நீளமுள்ளதாகும். மாடிகள் பல அதற்கு உண்டு. 600 பேர் உட்கார்ந்து ஒரே சமயத்தில், வாசிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

கவுண்ட் சுலுங்கி என்ற போலந்த் நாட்டு அறிஞர் மற்றும் டுப்ரே போன்றோர்கள் சேகரித்து வைத்த புத்தகங்கள் யாவும் இந்த நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

ருஷ்யப்புரட்சியின் காரணமாக ஏற்பட்ட மாறுதல்களால், அரசக் குடும்பத்திற்குச் சொந்தமாக இருந்த ஏராளம் புத்த கங்கள் பறிமுதல் செய்யப்பட்டு இந்த நூல் நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

19ஆம் நூற்றாண்டில் நெப்போலியன் ருஷ்யா மீது போர் தொடுத்தான் அப்போரில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அங்கு இருந்து சுமார் இரண்டு லட்சம் புத்தகங்கள் பாரீஸ் நகருக்குக்கொண்டு போகப்பட்டது.

செய்தி பத்திரிகையின் மூலமாக, நூலசத்தின் அவசியத்தை மக்கள் உணருமாறு, நூலகத் தலைவர் மாட் சுட்கார்ட் செய் தார்.

புகழ் பெற்ற பல அறிஞர்களும், நூலகங்களையே கோவிலாகக் கருதியதுண்டு லண்டன் நூலகத்தில் காலையில் நுழையும் முதல் மனிதராக கார்ல் மார்க்ஸ் இருந்தார்.

அதுபோல் கடைசி மனிதராகத்தான் இரவு வெளியே வருவாரம். அந்த நாட்களில் ஏராளம் புத்தகங்களைப் படித்து குறிப்பு எடுத்தாரம்.

இந்தியாவில் நூலகம் தோன்றி, நல்ல முறையில் இயங்கி வருவதற்கு முக்கியக்காரணமாக இருந்தவர் ரங்கநாதனாகும்.

1892ல் பிறந்த அவர், பள்ளிப்படிப்பிலும் கல்லூரிப்படிப் பிலும் சிறந்த மாணவராகக்கருதப்பட்டார் சிறந்த நூலக ஆணையாளரகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுமார் 60 நூல்களும் 1500க்கு மேற்பட்ட கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். அவருடைய விடாமுயற்சியால் டில்லியில் பெரிய ஒரு பொது நூலகம் நிறுவப்பட்டுள்ளது.

பொது நூலகச்சட்டம் அவருடைய விடா முயற்சியால் 1948 இல் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. 1950 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்திய அரசு அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி கவுர வித்தது.

அவரைச்சிறப்பித்து இந்திய தபால் இலாகா 30—8—1992 யன்று, விசேட ஸ்டாம்பு ஒன்று வெளிப்பட்டுள்ளது குறிப் பிடத்தக்க ஒன்றாகும்.

வாசகர் கடிதம்

அன்பிற்குரிய நூலகஞானி அவர்களுக்கு, வணக்கம். நூலகம் இலக்கியம் இதழ் 6 பார்த்ததும் தங்களின் இதழுக்கு ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்று தோன்றியது. நூல்கள், விமர்சனம், நூலகம் என்ற இக்கட்டுரையை அனுப்புகிறேன். தரமிருப்பின் பிரசுரிக்கவும். கட்டுரை பற்றிய தங்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

என்றும் அன்புடன்,
பொள்ளாச்சி நசன்

தொடர்ந்து எழுதுங்கள். நன்றி! (ஆ-ர்)

பாரம் IV (ரூல் 8—காண்க)

நூலகம் இலக்கியம்

1. வெளியிடுமிடம் : 6, மு.வ தெரு, சென்னை—106,
2. வெளியீட்டின் பருவ காலம் : மாதம் ஒரு முறை
3. அச்சடிப்படிப்பவர் பெயர் : பி. அய்யாசாமி
   ,, தேசம் : இந்தியன்
   ,, விலாசம் : திருமலை தெய்வம் ஆர்ட் பிரிண்டர்ஸ் 14, யாதவாள் தெரு அமிஞ்சி கரை சென்னை—600 029.
4. வெளியிடுபவர் பெயர் : டாக்டர். ப. பெருமாள்
   ,, தேசம் : இந்தியன்
   ,, விலாசம் : 6, மு. வ. தெரு சென்னை—600 106.
5. ஆசிரியர் பெயர் : டாக்டர் பா. பெருமாள்
   ,, தேசம் : இந்தியன்
   ,, விலாசம் . 6, மு, வ. தெரு சென்னை—600 106.
6. செய்திப்பத்திரிகையின் உரிமையாளர் : பா. பெருமாள் 'இந்திரா' 6, மு.வ. தெரு அரும்பாக்கம் சென்னை—600 106.

டாக்டர். பா. பெருமாள், இதன் மூலம் மேலே சொன்ன விபரங்கள் அனைத்தும் உண்மையே, இதை நம்பிக்கை யுடனும் முழு நாலெட்சுடனும் அறிவிக்கிறேன்,

1.3.1996

ஒப்பம் டாக்டர் பா. பெருமாள்
வெளியிடுபவர்


Edited printed and published by NOOLAGAGNANI Dr. Pa. PERUMAL M. A., M. Lib Sc, Ph. D.; from 6, Mu. Va. Street, Arumbakkam, MADRAS – 600 106. Phone No. 484 5034. Printer P. AYYASAMY at Thirumalai Deivam Art Printers 14, Yadaval Street, Aminjikarai, MADRAS—600 029.



காஞ்சி முனிவரின் சர்வதேச நூலகம்



டாக்டர் E. ஹரிஹரன்
புகழ்மிக்க சிறுவர் இலக்கிய மேதை
கோகுலம் ஆசிரியர்



விமரிசனம் அடுத்த இதழில்

தமிழ் புத்தகங்கள் 1995, சிறுவர் நூல்கள் பத்திரிகைகள்
தொடர்.....விரைவில் நூலகம் இலக்கியத்தில்

NOOLAGAM ILAKKIYAM Tamil Monthly March, 1996
Regd No. TN / MS (N) / 922 R.Dis 4441 / 95.E



சிறுகதை மன்னர் **ஜெயகாந்தன்** அவர்களுக்கு அண்மையில் சாகித்திய அகாதெமி
சிறப்பு விருது வழங்கியது. அவருடைய வீட்டிற்குச் சென்று அளித்த பாராட்டு.
தொழில் அதிபரும் சிறந்த இலக்கிய ஆர்வலருமான, ஆதம்பாக்கம் **வே. திருநாவுக்கரசு**
அவர்கள் பொன்னாடை அணிவிக்கிறார். உடனிருப்பவர் முத்தமிழ்க் கவிஞர்
டாக்டர் ஆலந்தூர் **கோ. மோகனரங்கன்** அவர்கள்.

அட்டை அச்சிட்டோர் :
மெட்ரோ பிரிண்டர்ஸ் & பேக்கேஜிங் இண்டஸ்டிரி சென்னை-29. ✆ 420345